1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ................

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

2.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க

அ) உரிமைத்தாகம் - 1. பாரசீக கவிஞர்

ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி

இ) ஜலாலுதீன் ரூமி - 3. பக்தவத்சல பாரதி

ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்

இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்தகுடும்ப முறை

இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

6.பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.

7. 'உரிமைத் தாகம்' சிறுகதையோடு தொடர்பில்லாத கதைமாந்தர்

அ) முத்தையன் ஆ) மூக்கம்மா

இ) வெள்ளைச்சாமி ஈ) மருதன்

8. தாழ்கடல் - இலக்கணக் குறிப்பு

அ) இடைக்குறை ஆ) உரிச்சொற்றொடர்

இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

9. பொலிந்தான் - இச்சொல்லின் உறுப்பிலக்கணம் பிரிப்பு முறை

அ) பொலி+ந்+த்+ஆன் ஆ) பொலி+த் (ந்)+த்+ஆன்

இ) பொலி+ந்+தான் ஈ) பொலி+ந்+தா+ன்

10. Lobby - இச் சொல்லின் தமிழாக்கம்

அ) ஓய்வறை ஆ) சிற்றீகை இ) வெளியேறுதல் ஈ) சிற்றுணவு